நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் சாட்சியாகிய- அஸ்வந்த் என்பவரின் வாக்குமூலம் 1969- ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு. மனோகரன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அஸ்வந்த் | மதம் | : இந்து |
| தந்தை./கணவர் பெயர் | : கோபாலகிருஸ்ணன் | ஜாதி | : |
| கிராமம் | : பாலடா | தொழில் | : மேலாளர் |
| தாலூக்கா | : உதகை | வயது | : 34 |

---

**29.1.2026**

(துவங்கப்படும் நேரம் - 11.55 AM)

(முடிக்கப்பட்ட நேரம் - 12.00 PM)

**O.S. No.25/2025 (P.W.1)**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதிவங்கியின் மேலாளராவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். 02.11.2015 ஆம் தேதியிட்ட பிரதிவாதி கொடுத்த கடன் விண்ணப்பத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**.1** ஆகும்**.** 17.11.2015 ஆம் தேதியிட்ட கடன்அனுமதி கடிதம் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**.2** ஆகும். 17.11.2015 ஆம் தேதியிட்ட பொது ஒப்பந்தத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**.3** ஆகும். 10.11.2018 ஆம் தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**.4** ஆகும். 30.03.2020 ஆம் தேதியிட்ட பிரதிவாதி வாதிக்கு கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா**.**சா**.**ஆ**.5** ஆகும். 10.03.2023 ஆம்

தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு கொடுத்த உயிர்ப்பு கடிதத்தின் நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.**6** ஆகும். 27.11.2024 ஆம் தேதியிட்ட வாதியின் கடனுக்கான வங்கி கணக்கு பட்டியல் வட்டி கணக்கு குறிப்பாணையுடன் கூடியது நகல் (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.**7** ஆகும் ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என பிராத்திக்கிறேன்.